# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 60/ந/2017

ஆணை எண். 281/2017

நாள் : 18/12/2017

திருமதி ஜா. பாக்கியவதி,
நாமக்கல்.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி,
நாமக்கல்

– எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகராட்சி, மோகனூர் சாலை, திருநகர் 30, மோகனூர் சாலையில் வசிக்கும் திருமதி ஜா. பாக்கியவதி அவர்களின் 20.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.03.2017 அன்று பெறப்பட்டு, 60/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகராட்சி, மோகனூர் சாலை, திருநகர் 30, மோகனூர் சாலையில் வசிக்கும் திருமதி ஜா. பாக்கியவதி என்பவர், தனக்கு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் கடை எண்.5 ஒதுக்கீடு செய்யப்பட்டு 1985–ஆம் ஆண்டிலிருந்து தனது பொறுப்பில் உள்ளதாகவும், மாத வாடகை நிலுவை இல்லாமல் செலுத்தி வந்தும், கடைக்கான குத்தகையினை புதுப்பிக்க நகராட்சி நிர்வாகம் மறுத்து வருவதாகத் தெரிவித்து, மேற்படி கடைக்கான குத்தகையினை புதுப்பித்துத் தர ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 11.05.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது. 1989–ஆம் ஆண்டிலிருந்து மேற்குறிப்பிட்ட கடைக்கு தான் குத்தகைதாரராக இருப்பதாகவும், 2016–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ரூ.9,775/– வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது என விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், 1995–ம் ஆண்டிலிருந்து வாடகை நிலுவையில் உள்ளதாக தெரிவித்து ரூ.1,20,000/–க்கான குத்தகை முன்பணத்தை பெறுவதற்கு நகராட்சி மேலாளர் மறுத்து விட்டார் என்றும், எனினும் அத்தொகையினை வங்கி காசோலை மூலம் நகராட்சிக்கு செலுத்திவிட்டதாகவும் விசாரணையின்போது குறிப்பிட்டார். மேலும், 01.09.2016 முதல் 02.03.2017 வரை நகராட்சிக்கு செலுத்திய காசோலை விவரங்களையும் சமர்ப்பித்தார்.

3. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், வரிவிதிப்பு எண்.109–க்கு உட்பட்ட கடை எண்.5–க்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகை குறித்து மனுதாரருக்கு அனுப்பிய 23.07.2016 மற்றும் 09.08.2017 நாளிட்ட அறிவிப்பு நகல்களை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிவிப்பில் மேற்படி கடைக்கான திருத்திய வாடகை 01.07.2016 முதல் ரூ.8,500/– என்றும் ஒருவருட வட்டித் தொகை ரூ.1,02,000/– மற்றும் 1994–95–ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ரூ.46,385/–(ரூபாய் 39,480+ 6905) ஆக மொத்தம் ரூ.1,48,385/–

செலுத்தப்படவேண்டுமெனவும், மேற்படித் தொகையில் வைப்புத் தொகை ரூ.1,02,000/- மட்டும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கான வாடகை தொகை நிலுவையில் உள்ளதால் கடை உரிமத்தை நீட்டிக்க இயலாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

4. நாமக்கல் நகராட்சி ஆணையரிடம் 28.11.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் வாடகைத் தொகையினை அவர் குறிப்பிட்டது போல் நிலுவை இன்றி செலுத்தவில்லை என்றும், வாடகை நிலுவையில் உள்ளது குறித்து தணிக்கைத் துறை தடை எழுப்பியுள்ளதையும் விசாரணையின்போது குறிப்பிட்டார். மேலும், வாடகைத் தொகை நிலுவையில் உள்ளது குறித்து, நகராட்சி அலுவலகம் வந்து சரிபார்த்துக் கொள்ளுமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் அலுவலகம் வந்து வாடகைத் தொகை நிலுவை விவரங்களை சரிபார்க்கத் தவறியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

5. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் விசாரணையின்போது அளித்த வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டன. 1994-95 ஆண்டுக்கான வாடகைத் தொகை ரூ.46,385/- நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தணிக்கைத் துறையினரும் இந்நிலுவைத் தொகை குறித்து தணிக்கைக் குறிப்பினை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. இத்தணிக்கைத் தடை காரணமாக சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளரிடமிருந்து 30% நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது எனவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தான் நிலுவையின்றி வாடகை செலுத்தியுள்ளதை உறுதி செய்யும் வகையில் நகராட்சி அலுவலகம் சென்று வாடகை செலுத்திய விவரங்களை சரிபார்த்து, செலுத்த வேண்டிய வாடகைத் தொகை நிலுவை இருப்பின், அதை செலுத்துவதே முறையாகும். அதைத் தவிர்த்து , வாடகை விவரங்களை சரிபார்க்கத் தவறுவது மனுதாரருக்கு முறையாகாது. எனவே, மனுதாரர் வாடகைத் தொகைக்கான விவரங்களை நகராட்சி அலுவலகம் சென்று சரிபார்த்து, செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருப்பின் அத்தொகையினை செலுத்தியபின் கடைக்கான குத்தகை உரிமத்தினை புதுப்பிக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017- ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 19-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திருமதி ஜா. பாக்கியவதி,**
   **எண்.30, திருநகர், மோகனூர் சாலை,**
   **நாமக்கல் - 637 001.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **நாமக்கல் நகராட்சி,**
   **நாமக்கல்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு -3,
இ.கோ. / உதிரிகள்